RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s139

# முதின் முல்லைப் பாடல்கள் காட்டும் பெண் மைய சமுகம்

**இரா. காந்திமதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மஜ்ஹருல் உலூம் கல்லூரி, ஆம்பூர்-635802, தமிழ்நாடு, இந்தியா

# The Female-Centric Community as shown in the Songs of Muthin Mullai (a Part that Deals with the Valour of Women in Purathinai)

**R. Gandhimathi** [a, *]

[a] Department of Tamil, Mazharul Uloom College, Ambur-635802, Tamil Nadu, India

* Corresponding Author: rgmathi1979@gmail.com

Received: 02-06-2022
Revised: 24-08-2022
Accepted: 11-09-2022
Published: 19-11-2022

Check for updates

**ABSTRACT**

The Purathinai literary tradition is not merely a literary tradition. It is also a social tradition of that period. On this basis, one of the disciplines of the Purathinai literary tradition, the Mullai of Muthin Mullai, has within itself a social life. Muthinmullai songs, which describe the valour of women, also record that it is the duty of women to save the family and society for the family. Through such records, the Muthin mullai songs show pieces of evidence to understand the primacy and supremacy of women's lives in society. The songs are used to explain how women are viewed and to confirm the social identities of women, referred to as a matrilineal society. This article also highlights the need to find more data on why the Tamil community was such a predominantly female community.

**Keywords:** Purathinai, Muthin Mullai, Matrilineal Society, Female Community

## முன்னுரை

பாட்டும் தொகையுமெனப் பகுக்கப்பட்டுள்ள சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழர்தம் பல்வேறு வாழ்வியல் மரபுகளைப் பதிவு செய்துள்ள சமூக ஆவணங்களாக விளங்குகின்றன. சமூகம் உருவான தன்மை குறித்தும், அரசுகள் உருவான தன்மை குறித்தும் விளக்கும் சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் இயங்கியல் போக்கை, சமூக வளர்ச்சிப் போக்கை வெளிப்படுத்தி நிற்கின்றன. சங்க இலக்கிய பாடல்களைப் புரிந்து கொள்வதற்காகவும் படைப்பு முறைகளை நெறிப்படுத்தவும் திணை கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன.

திணை-துறை பற்றிப் பேசாமல் சங்க இலக்கியம் பற்றிப் பேச இயலாது. தொல்காப்பியம் சங்க இலக்கியத்திற்குப் பிற்பட்டது என்ற கருத்தை ஏற்றுக் கொண்டால், தமக்கு முந்திய இலக்கியங்களைப் பார்த்துத் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்தார். அவ்விலக்கணங்களின் வளர் நிலையே திணைக்கோட்பாடு எனலாம், அதைச் சங்க இலக்கியங்களும் பின்பற்றுகின்றன என்று சொல்லாம். திணைக் கோட்பாடுகளின் வழியானத் தரவுகளைக் கொண்டு அக்கால சமுக மரபுகளைப் புரிந்து கொள்ளமுடியும்.

## திணைக் கோட்பாடு

திணை என்பது ஒழுக்கம் என்பர். திணை என்பது நிலம் என்பர். இரண்டு கருத்தும் நடைமுறையில் உள்ளன. ஆனால் திணை என்பது நிலம் என்பது சங்க காலத்தைப் பொருத்தவரையில் உண்மையானதாக

உள்ளது. ஆனால் தொல்காப்பியர் அகத்திணை, புறத்திணை என்று இரண்டு இயல்களுக்குத் தலைப்பு வழங்குவது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. தொல்காப்பியர் அகம் புறம் குறித்து இலக்கணம் கூறும்போது புறப் பொருள்கட்கு திணை துறைகளை வகுத்துப் பேசுகிறார். அன்பினால் நிகழும் அகத்திணை யொழுகலாற்றைக் குறிஞ்சி முதலான ஐந்திணையாகவும், கைக்கிளை பெருந்திணைகளாகவும் சேர்த்து ஏழு திணைகளாகப் பகுத்துரைத்தல் பண்டைத் தமிழர் கண்டுணர்த்திய பொருளிலக்கண மரபாகும். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் ஏழையும் புறத்திணைகளாகக் கூறுவர். இத்திணைகள் பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில் வழங்கிய போர் முறைகளையும் அம் முறையில் காட்டப்பெறும் வீரச் செயல்களையும், பெரும்பான்மையாகவும், ஏனைய அரசியல், கொடை, புகழ் நிலையாமை முதலியவற்றைச் சிறுபான்மையாகவும் உணர்த்துகின்றன என்பார் (Subbureddiyar, 2004).

## வாகைத் திணையும் மூதின் முல்லை

மூதின் முல்லை என்பது புறத்திணைகளில் ஒன்றான வாகைத் திணையின் துறைகளில் ஒன்று. வாகைத் திணை பாலைத் திணைக்குப் புறனான திணை என்று தொல்காப்பியம் கூறியுள்ளது.

“வாகைதானே பாலையது புறனே

தா இல் கொள்கைத் தம்தம் கூற்றைப்

பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப”

எனும் தொல்காப்பியரின் (புறத்திணையியல் 15) கருத்துப்படி வாகைத் திணை வெற்றி நிலையைக் குறிக்கும். மேலும் வாகைத் திணையை வகைப்படுத்தும் தொல்காப்பியம் ஏழு வகையாகச் சுட்டுகிறது. பார்ப்பனப் பக்கம், அரசர் பக்கம், வணிகர் பக்கம், வேளாண் பக்கம், அறிவன் பக்கம், தாபதப் பக்கம், பொருநர் பக்கம் என்கிறது (Ilampooranar, 2005).

வாகைத்திணையை விரித்துக்கூறும் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் ஐயனாரிதனார் வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமான வாகைப் பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுதலைக் குறிக்கும் என்கிறார். மேலும் வாகைத்திணையின் துறைகள் 33 என வரிசைப் படுத்துகிறார். அத்துறைகளில் மூதின்முல்லை எனும் துறையும் ஒன்று.

## மூதின் முல்லை

வாகைத் திணையின் தன்மையைக் கூறும் தொல்காப்பிய புறத்திணையியல் 17ஆவது நூற்பா இல்லத்துக்குப் புகழ் தரும் கொடை, பிழை செய்வோரைத் தடுக்கும் காவல் ஆகியவை பற்றி குறிப்பிடுகிறது.

“இடை இல் வண் புகழ்க் கொடைமையானும்

பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்"

என்பதாகக் குறிப்பிட்டு தன் குடும்பத்தையும் குடும்பத்திற்கான சமூகத்தையும் காப்பாற்றுவது கடமை என்று விளக்கம் தருகிறது. இவ்விளக்கம் மூதின்முல்லை எனும் ஒரு துறை உருவாவதற்கு அடிப்படை எனலாம். அத்துறையை சங்ககாலப் பெண்களின் வீரத்தைக் கூறுவது மூதின்முல்லை எனப் புறப்பொருருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது (Ilampooranar, 2005).

“அடல் வேல் ஆடவர்க்கு அன்றியும், அவ் இல்

மடவரல் மகளிர்க்கும் மறம் மிகுத்தன்று”

மறவர்க்கு மட்டுமின்றி அந்த மறக்குடியில் வந்த மடப்பத்தினையுடைய மகளிர்க்கும் மறம் உண்டு என மிகுத்துக் கூறுவது மூதின் முல்லை எனப்படும் (Gowmarishwari, 2009). மூது இல்-பழைமையான குடியில் வந்த இல்லாளின் முல்லை- இயல்புமிகுதி.

## சங்க இலக்கிய மூதின் முல்லை

மறக்குடி மகளிரின் மேன்மையை சொல்லுதல் என்பதாக இருக்கும் மூதின் முல்லை என்பதில் மூதில் என்பது மூத்தகுடி. மூத்த முல்லை குடி என்பதாகக் கொண்டு மேம்பட்ட குடி என்பதை புரிந்துகொள்ள முடியும். சங்க இலக்கிய மூதின் முல்லை துறையில் அமைந்த புறநானூற்றுப் பாடல்கள் மூதில்லில் வாழும் குடும்பத் தலைவன் தலைவியரின் பெருமைகளை எடுத்துக் கூறுகின்றன. சங்க இலக்கியத்தின் புறத்திணை இலக்கியமான புறநானூற்றில் மூதின்முல்லைத் துறைப் பாடல்கள் 15 உள்ளன. அப்பாடல்கள் சங்ககால பெண்களின் வீரம், பெண் தலைமை, பெண்களின் அறம் உள்ளிட்ட பல்வேறு செய்திகளை காட்சிப்படுத்துகிறது.

## பெண் மறம்

ஆண்கள் மட்டுமே வீரம் நிறைந்தவர்கள் எனச் சொல்லும் பல பாடல்களுக்கு இடையில் பெண்களும் நிறைந்தவர்கள் என்பதை இந்த மூதின் முல்லை துறை பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவள் சிந்தை கெடுக எனத் தொடங்கும் 279 ஆவது புறநானூற்றுப் பாடல் நேரடியாக போர்க்களத்திற்கு செல்ல முடியாத சூழலிலும் போர்க்களத்திற்கு யாரை அனுப்புவது என்கிற முடிவை எடுக்கும் சங்ககால புறநானூற்று வீர பெண்களின் மறத்தன்மையைக் காட்டுவதாக உள்ளது. முதல் நாள் போரில் அவள் தந்தை பகைவரின் யானையைக் கொன்று தானும் மாண்டுபோனான். இரண்டாம் நாள் போரில் அவள் கணவன் குதிரைகளைக் கொன்று முன்னேறுகையில் மாண்டுபோனான். மூன்றாம் நாள் போர்ப்பறை கேட்டவுடன் தன் ஒரே மகனுக்குப் போராடை அணிவித்துப் போருக்கு அனுப்புகிறாள் என்பதை சொல்லி பால் மனம் மாறாத குழந்தையை போருக்கு அனுப்பும் அக்கால பெண்களின் வீரத்தை இப்பாடல் காட்டுகிறது (Avvai Duraisamy pillai, 1996).

புறநானூற்றின் 288 ஆவது பாடல், நெஞ்சில் வேல் பாய்ந்து கிடந்தவனின் குருதியைக் கண்டு பருந்துகளும் அஞ்சின. என்று குறிப்பிடும் புலவர் கழாத்தலையார், பெரும்போர் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போரில் வீரன் ஒருவனின் மார்பில் வேல் பாய்ந்தது. வேல் பாய்ந்த மார்புடன் அவன் நிலத்தில் வீழ்ந்தான். அவன் மனைவி அவனைத் தழுவும் நோக்கத்தோடு அவன் அருகில் வந்தாள். அவளைத் தழுவவிடாமல் அவன் உடலைப் பருந்துகள் மொய்த்தன. என்பதாக காட்சிப்படுத்துகிறார். அவன் பகையரசன் யானைமேல் வேல் வீசினான். பகையரசன் அவன் மார்பில் வேல் எறிந்தான். அவனோ அந்த வேலைப் பிடுங்கி ஓங்கினான். அது கண்ட பகையரசனின் யானைகள் புறங்கொடுத்து ஓடின (புறம் 308) என்பன போன்ற பாடல்கள் மூதின் முல்லை துறை சார்ந்த வீரம் நிறைந்த புறத்திணை மரபைக் காட்சிப்படுத்துகின்றன. போர்ச்சூழலில் பெண்ணின் பங்களிப்பையும் உறுதி செய்கின்றன (Avvai Duraisamy pillai, 1996).

## பெண் முதன்மை

சமூக அமைப்பில் மட்டுமல்லாது குடும்ப அமைப்பிலும் யார் யாருக்கு என்னென்ன கடமை என்பதைச் சொல்லும் புறப்பாடல் வீரமிக்க தாயின் கூற்றாகவே அமைகிறது. மகனைப் பெற்று வளர்த்தல் என் கடமை. அவனைச் சான்றோன் ஆக்குதல் தந்தை கடமை. அவனுக்கு வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லன் கடமை. அவனை நல்லவனாகவும் வீரனாகவும் ஆக்குதல் வேந்தன் கடமை. போர்க்களத்தில் களிற்றை வென்று மீளல் காளையாகிய என் மகன் கடமை. எனும் 312 ஆவது புறநானூற்றுப் பாடல் மூதின் முல்லை துறைக்கு சரியான சான்றாக அமைகிறது. இது தாய் தலைமை சமூகத்தின் எச்சமாக இருப்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

தன் கணவன் பகை நாட்டைக் கைப்பற்றட்டும் என்று ஒருத்தி தன் முன்னோரின் நடுகல்லை வழிபட்டாள். (புறம் 306). வேறொரு பெண் போர்களத்தில் களிறு எறிந்து பட்ட வீரனுக்கு நடப்பட்ட கல்லைத் தவிர நெல் தூவி வணங்கும் வேறு கடவுள் இல்லவே இல்லை என்பதை, நடுகல்லை வழிபடுதல் மட்டுமின்றி நடுகல் வழிபாடு தவிர வேறு வணங்கும் கடவுள் இல்லை (புறம் 335) என்ற பாடலின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

## பெண் அறம்

இனக்குழு சமூகத்தின் பொதுத்துய்ப்பு முறையை புறநானூற்று மூதின் முல்லைத் துறைப் பாடல்களில் காணமுடிகின்றது. புறநானூற்று 326 ஆவது பாடல் தலைவிக்குப் பாணர்க்கு விருந்தோம்புதலில் வேட்கை. அவளின் தலைவனுக்கோ பகைவனின் பட்டத்து யானையைக் கொன்று அதன் நெற்றியணிகலனாகிய ஓடையைத் தன் அரசனிடமிருந்து பரிசாகப் பெறும் வேட்கை. அந்தத் தலைவி மட்டுமல்ல அவளின் தலைவனான சீறூர் மன்னனும் அத்தகையவனே. மாடு கட்டிப் பிணையல் அடிக்காமல் தானே காலால் துவட்டி எடுத்த வரகைக் கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தான் பிறரிடம் இரக்கும் வறுமையாளன்தான் என்றாலும், பகையரசன் வந்தால் தான் ஒருவனாகவே தாங்கும் வலிமை உடையவன் அவன் (புறம் 327). அவன் ஊர் நெல் விளையாத புன்புலம். தன் வயலில் விளைந்த வரகு, தினை ஆகியவற்றையெல்லாம் அவன் இரவலர்களுக்கே வழங்குவான். என்று காட்சிப்படுத்துகிறது (Avvai Duraisamy pillai, 1996).

மூதின் முல்லை பெண்ணின் கணவனான பாடல் தலைவன் பேணுவோரின் துன்பத்தை எண்ணிப் பார்க்காமல், தன்னிடமுள்ள அனைத்தையும் இரவலர்க்கு ஈயும் பண்பினன். வீரர்கள் மட்டுமல்லாமல் அம்மறக்குடியிற் பிறந்த மகளிர்க்கும் சினமுண்டாதலை சொல்ல வந்த 333 பாடல் மூதின் முல்லைத் துறைப் பாடல் தலைவியின் அறம் பற்றிப் பேசுகிறது. விதைத் தினையையும் குற்றி விருந்து படைப்பாள் என்பதாக குறிப்பிட்டுப் பதிவு செய்கிறது. வீட்டில் உணவுக்கான தானியங்கள் இல்லாத சூழலில் உணவளிக்கும் தலைவி காட்சிப் படுத்தப் படுகிறாள். அவன் சமூக அறம் தெரிந்த மூதின் முல்லை துறை தலைவி, தாய்வழி சமூக எச்சமாய் மனிதர்களுக்கு மட்டுமின்றி அவள் முற்றத்தில் விளையாடும் முயலுக்கும் உணவிடுவாள். பாணர்க்கும் விருந்தளிப்பாள். அந்த இல்லத்தின் தலைவனோ பரிசிலர்க்கு வேண்டியவை அனைத்தும் கொடுப்பான். அங்குள்ள குழந்தைகளும் அத்துறைக்கான அறத்தில் பங்கு கொள்கின்றனர் என்கிறது புறநானூறு 334 ஆவது பாடல். இதன் மூலம் சங்க காலப் பெண் முதன்மையை உறுதி செய்ய முடிகிறது (Avvai Duraisamy pillai, 1996).

சமூக வாழ்வியலில் "எண்ணரும் பாசறை பெண்ணொடு புணரார்" எனக்கூறிடும் தொல்காப்பியம் (1121) நினைத்தற்கு அரியவற்றை எண்ணிக்கொண்டிருக்கும் பாசறைக்கண் பெண்டிரோடு ஆண்மக்கள் போகமாட்டார்கள். புறத்திணை பணிகளுக்குள்ள பெண்டிர் பாசறைக்கண் பொருந்துவர் என்று கூறுகிறது போர்ச்சூழலில் வீரர்களுக்கு பணிவிடை செய்வதற்காக சில பெண்கள் மட்டும் வந்துள்ளனர். குலமகளிர் போன்ற பெண்கள் போர்க்களத்திற்கு வருவது இல்லை என்பது தொல்காப்பியர் கால வழக்கு. அதேசமயம் புராதான சமூக வரலாற்றைப் பேசும் புறநானூற்றுப் பாடல்களின் மூதின் முல்லை துறை சொல்லக்கூடிய பாடல்களின் வழியாக பார்க்கும் பொழுது இனக்குழு சமூக அமைப்புகளின் எச்சங்களைப் பதிவு செய்துள்ளது.

## முடிவுரை

மூதின் முல்லை பாடல்கள் பெரும்பாலும் சீறூர் மன்னர்கள் சமுதாயத்தைச் சார்ந்த பெண்களின் மறப் பண்பையும் பெண்களுக்கு அரசாங்கத்திலும் சமூக உருவாக்கத்திலும் இருந்த தொடர்பையும் பேசுவதாகவே அமைந்துள்ளன. பெண்கள் ஆண்களுக்கு நிகராக சமூக அதிகாரம் மிக்கவர்களாக இருந்ததோடு போர்க்களத்திற்கு யாரை அனுப்புவது என்பது முடிவு செய்யும் இடத்திலும் இருந்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. பெண்களின் சமூகவியல் பங்கு பற்றி சமூகவியல், மார்க்சியம், உலகாயுதம் போன்ற கோட்பாடுகளை கொண்டு ஆய்வு செய்த அறிஞர்கள் உலகம் முழுவதுமான தொடக்ககால சமுதாய உருவாக்கம் என்பது பெண் மைய சமூகமாக அதாவது தாய்வழிச் சமூகமாகவே இருந்துள்ளது என்று குறிப்பிடுகின்றனர். மேற்கண்ட இந்த ஆய்வு முடிவுகளுக்கு வலு சேர்ப்பதாக சங்க இலக்கியங்களின் மூதின்முல்லை துறை பாடல்களும் அமைந்துள்ளன என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. தமிழ்ச் சூழலிலும் சமூக உருவாக்கத்திலும் குடும்ப உருவாக்கத்திலும் முதன்மை பெற்றவர்களாகவே பெண்களே தொடக்க காலத்தில் இருந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்து கொள்ள முடிகிறது. புறத்திணை இலக்கண மரபுகள் சுட்டும் பெண்கள் தொடர்பான கருத்தாக்கங்களை மறு ஆய்வு

செய்து அதை அக்காலகட்ட இலக்கியங்களோடு ஒப்பிட்டு புதிய கோட்பாட்டு வழிமுறைகளை உருவாக்க வேண்டியதின் அவசியத்தையும் உணர்ந்து கொள்ள முடிகிறது.

## References

Avvai Duraisamy pillai, S. (1996) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Gowmarishwari, (2009) Puraporul Venbamalai, Saradha Pathippagam, Chennai, India.

Ilampooranar, (2005) Tholkappiyam Porulathikaram, Saratha Pathipagam, Chennai, India.

Subbureddiyar, N. (2004) Tholkappiyam Kattum Valkai, Palaniyappa Brothers, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License